1981 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியாகிவிட்டது. ஒவ்வொரு கட்சியாகப் பேசிக் கொண்டு இருந்தால் நேரம் அதிகமாகும். நான் டாக்டர் இராம லிங்கம் பேசியதையும் நீக்கி விட்டேன். தற்போது திரு. சுந்தர ராஜ் பேசிய கடைசி பகுதியும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று காலையில் 4 மணி அளவுக்கு நடைபெற்றது என்றும் அதற்கான நிலைமை எல்லாம் நான் விளக்கிக் காட்டினேன். அதைப் பற்றி புலன் விசாரணை நடைபெறும் என்றும் சொல்லி இருக்கிறேன். இந்த நிலையில் அரசியல் பற்றியோ அதன் பின்னணி பற்றியோ எந்தப் பிரச்சினையையும் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையைப் பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை. முழு உண்மை தெரியாத நிலையில் நாமே ஒரு முடிவுக்கு வருவது தவறு. புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு இந்த அளவோடு விட்டுவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் இராம லிங்கம் சொன்னதையும், திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் சொன்ன சில வார்த்தைகளையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

ஆ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

(திரு. ரகுமான்கான் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான் கான் கொடுத்துள்ள பிரச்சினை என ஆய்வில் இருக்கிறது.

*திரு. க. அன்பழகன்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினையை நான் எடுத்துச் சொல்வது முறை அல்ல. ஆனால், கொடுத்திருக்கிற பிரச்னை சாதாரண பிரச்னை அல்ல. ஆய்வில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய பிரச்னை அல்ல. சட்டமன்றததில் இருக்கின்ற ஒரு உறுபபினரின் நியாய மான உரிமைகள் பாதிக்கப்படத்தக்க வகையில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்று இருக்குமானால் அது அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிற அளவிற்கு வாய்பபு அளிக்க வேண்டியது சபையின் தலைவர் சபை உறுப்பினர்களுக்குத் தரவேண்டிய பாது காப்பு ஆகும். ஆகவே, தாங்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொல்வதன் மூலம், அதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர வாய்ப்பு இலலாமல தவறிப்போகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான் கான் அவர்கள் அந்தத் தீர்மானத்தை காலையில் 8–45 மணிக்குத்தான் கொடுத்தார்கள். 15 நிமிடத்திற்குள் என்ன செய்ய முடியும்.

திரு. அ. ரகுமான்கான்: எந்தப் பொருள் குறித்து கொடுத்து இருக்கிறேன் என்று சொல்லக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிச் சொல்வதாக இருந்தால், அதை இப்போதே அனுமதித்து விடலாமே.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அவர் எதைப பற்றிக் கொடுத்தார் என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா? தாங்கள் கூறினால் தானே தெரியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பிரச்னையை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம், இன்றுதான் அதைக் கொடுத்து இருக்கிறார்கள். அரசுத் தரப்பில் அது குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இங்கே அதை எழுப்ப அனுமதி அளித்து விட்டால், அதற்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதால், நாளைக்கு அதை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அது எந்தப் பிரச்சினை குறித்து என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் வீடு தாக்கப்பட்டது குறித்து திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அது என் ஆய்வில் இருக்கிறது.

3. வரவு செலவுத் திட்டம் 1981–82 விவாதம்—தொடர்ச்சி

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது நான் சில முக்கியமான கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கத்திற்கு எந்த ஒரு மாநில அரசாங்கத்தையும் கலைக்கின்ற அதிகாரம் இருக்கக் கூடாது என்றும், அதேபோல் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கிடைக்கவேண்டும் என்றும், நேற்றைக்கு வலியுறுத்திக் கூறியதைத் தொடர்ந்து இன்றைக்கும் சில முக்கியமான விஷயங்களை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.